# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2015/2016 (ஆகஸ்ட் 2018)

**TLS 2243 தமிழில் காவியங்கள்**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி – I

1. (அ) வீரயுகத்துக்கும் இதிகாசங்களின் தோற்றத்துக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றி மேல்நாட்டு ஆய்வாளர்கள் முன்வைக்கும் கருத்துக்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

   (ஆ) தமிழில் காவியங்களின் தோற்றம் குறித்து ஆய்வாளர்கள் முன்வைக்கும் கருத்துக்களை நீர் படித்த தமிழ்க் காவியங்களின் துணைகொண்டு சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

2. (அ) மணிமேகலைக் காவியத்தின் கதையமைப்பை விளக்குக. (10 புள்ளிகள்)

   (ஆ) அக்காவியத்தில் ஆபுத்திரன் கதை இடம்பெறுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

3. (அ) பெரியபுராணத்தின் அமைப்பு பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

   (ஆ) தடுத்தாட்கொண்ட புராணத்தின் முக்கியத்துவத்தை விளக்குக. (14 புள்ளிகள்)

## பகுதி – II

4. “பத்தினித் தெய்வத்தின் வரலாறு உரைப்பதே சிலப்பதிகாரத்தின் பிரதான நோக்கமாகும்” சிலப்பதிகார எடுத்துரைப்பு முறையை அடிப்படையாகக்கொண்டு இக்கூற்றைத் தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

5. சீவகசிந்தாமணிக் காவியத்தின் அமைப்பு முறையைக் குறிப்பிட்டு, அக்காவியத்தின் இலக்கியச் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக. (20 புள்ளிகள்)

6. “கம்பர், தனது காவியத்தில் மானிட உறவுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளார்” இக்கூற்றை ஆராய்க. (20 புள்ளிகள்)

7. “தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பிய இலக்கணத்தைச் சீறாப்புராணம் முழுமையாகப் பின்பற்றியுள்ளது” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (20 புள்ளிகள்)